www.newwisdomministries.com

# ஞா
# ன
# ஒ
# லி





# நான் தாகமாய் இருக்கிறேன்

**ஞானம் 07 - ஒலி 04 - 28.01.2024**

# தப்பவிடாது இறையருள்.....






**தலையங்கம்**

அருட்பணி.இ.சைமன் பீட்டர்,
ஆசிரியர் – ஞான ஒலி


அன்பிற்கும் பாசத்திற்கும் உரிய எனதருமை சகோதர, சகோதரிகளே வணக்கம்.

உங்கள் வாழ்வு நலமும், வளமும் நிறைந்திட நம் அருள்நாதர் இயேசு அருள்புரிவாராக.

உலகில் படைக்கப்பட்ட அனைத்தும் இறைவனின் கருணையால் உண்டாயின. ஆனால், அவர்களில் சிலரைத் தன் சிறப்பான பணிக்காகத் தெரிந்து கொள்கின்றார். அவர்களைப் படைக்கும்போதே, அதற்கான விதைகளை அவர்களில் ஊன்றிவிடுகின்றார். அவர்கள் வளர வளர, அவர்களுக்குள் விதைக்கப்பட்ட பணிவிதைகள் கூடவே செழிப்பாக வளர்கின்றன. அறிவும், தெளிவும் பிறக்கின்றபோதே, அந்த உயிர்கள் தங்களுக்குள் ஏதோ ஒரு தேடல் இருந்துகொண்டே இருப்பதை உணர்கின்றார்கள். ஆனால், அது என்ன என்று அவர்களுக்குத் தெரிவதில்லை. இது பரம இரகசியம். ஆனால், குறித்த காலமும், தகுதியும் வந்தவுடனே, இறைவன் அவர்களுக்குள் விதைத்து வளர்த்த அருள் முதிர்ச்சியடைந்து பலன் கொடுக்க வேண்டிய தருணம் வந்ததும், அது தன் செயலை ஆரம்பிக்கின்றது. கடவுளின் உள்ளார்ந்த குரலை அவர்கள் கேட்க ஆரம்பிக்கின்றார்கள்.

இறைவனின் அழைப்பு, மற்ற உயிர்களின் வாழ்வைப்போல் அல்ல, மாறாக வேறோர் பணிக்காக நாம் அழைக்கப்பட்டுள்ளோம் என்று உணர ஆரம்பிக்கும்போது அந்த இறைப்பணி செயல்வடிவம் பெற ஆரம்பமாகின்றது. அத்தகைய அழைப்பிலிருந்து யாரும் தப்பிக்க முடியாது. அது இறைவனின் கட்டளை, மனுக்குலத்தின் நன்மைக்காக அவர்கள் கடவுளால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், வேறு வழி அவர்களுக்கு இல்லை. அது அடிமைத்தனமல்ல, மாறாக, அந்த வாழ்வு இறைவனின் பிரதிநிதிக்கான சிறப்பான வாழ்வு மனுக்குலத்தின் நன்மைக்காக வாழும் வாழ்வு அது. யாருக்குமே கிடைக்காத பேறு அது, அது கடவுளின் நன்கொடையாகும், அதை உணர்ந்தபிறகு யார் அதை வேண்டாம் என்று சொல்வார்கள். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு, அழைக்கப்பட்டவர்தான் நம் புனிதை.அன்னை தெரேசா.

அந்த இறைப்பணிக்கான அருள் விதை விதைக்கப்பட்டு வளர்ந்து பலன் கொடுக்க வேண்டிய தருணத்தில், அன்னை தெரேசா

அவர்கள் துறவியானார், அவருக்குள் இருந்த இறையருள், தன் வழியில் அவரை வழிநடத்திக்கொண்டிருந்தது. அதன்படி ஒருநாள், துறவுமடத்தின் விதிமுறைப்படி, டார்ஜிலிங்கில் நடக்கவிருந்த வருடாந்தர ஒருவார தியானத்தில் கலந்து கொள்வதற்காக, ஏனைய அருட்சகோதரிகளோடு, ஹவ்ரா இரயில் நிலையத்திற்கு சொல்கின்றார். அவ்வாறு குறிப்பிட்ட இரயிலைப் பிடிப்பதற்காக வேகவேகமாகச் செல்லும்போது, இரயில் நிலையத்தில் நடைபாதையின் ஓரமாக, ஒரு நோயாளி படுத்துக்கிடக்கின்றார். அவர் உடல் முழுவதும் புண்களாய் இருக்கின்றன. அருட்சகோதரிகளோடு அன்னை தெரேசா அவரைக் கடந்து அவர்கள் செல்லும்போது, அந்த நோயாளி, தாகமாய் இருக்கிறது… தாகமாய் இருக்கிறது, தண்ணி, தண்ணி என்று கத்திக்கொண்டே இருக்கின்றார். அந்த இரயில் நிலையத்தில் இருந்த யாரும் அவருக்கு உதவ முன்வரவில்லை. அவரவர் வேலையைப் பார்த்துக்கொண்டு சென்று கொண்டிருந்தனர். ஆனால், அன்னை தெரேசா அவர்கள் மட்டும் அவரது குரலைக் கேட்டார்….யாரையுமே பாதிக்காத அந்த ஈனக்குரல் அன்னை தெரேசாவின் இதயத்தையும்,உயிரையும் சுண்டி இழுத்தது. அந்தக் கணத்தில்தான் இறைவன் அன்னை தெரேசாவில் விதைத்த விதையை உடைத்து முளைக்க வைத்த நேரம். அன்னை தெரோசா நின்று, ஒரு குவளையில் தண்ணீர் எடுத்துவந்து, அந்த மனிதருக்கு அருகில் வைத்துவிட்டு தன் இரயிலைப் பிடிக்கத் திரும்பியபோது, அந்த நோயாளி, தண்ணி, தண்ணி, தாகமாயிருக்குது,. தாகமாயிருக்குது என்று கத்திக்கொண்டே இருந்தார். ஏனெனில், அந்தத் தண்ணீர்க் குவளையை எடுத்துக் குடிக்கக்கூட முடியாதவராய் இருந்தார். அப்போது, அவரோடு வந்த மற்ற சகோதரிகள்..இரயிலுக்கு நேரமாகிவிட்டது, இரயில் புறப்படப்போகிறது, தெரேசா விரைவா ..வா…என்று அவர்கள் கூப்பிட்டுக்கொண்டே இருந்தார்கள். அவசரத்தைக் கருத்தில் கொண்டு அன்னை அவர்கள், அவருக்கு மேலும் உதவமுடியாமல், மனவேதனையோடு, வேகமாய்ச் சென்று, இரயில் ஏறிக்கொண்டார். இரயில் டார்ஜிலிங்கை நோக்கி புறப்பட்டுச் சென்றது.


ஒரு பக்கம் இறைவனின் அழைப்பு, அந்த நோயாளின் மூலம் அவருக்குக் கொடுக்கப்பட்டது…ஆனால், அதற்கு நேரெதிராக உலகம் அவரை, அந்த இறையழைத்தலை உதற வைத்தது. இந்த இறைவனின் பணிக்கான தகுந்த நேர நிகழ்வை அன்னையும் அறியவில்லை. அவரின் சகதோழிகளும் அறியவில்லை. இதுதான் இறைவனின் மறைபொருள். ஆனால், இறைவன் அந்த நோயாளின் குரல்மூலமாக…தாகமாயிருக்கிறேன்.. என்ற சத்தம் மட்டும்…அன்னையின் உயிருக்குள் எதிரொலித்துக்கொண்டே அவரை இறைப்பணிக்காகத் தூண்டிக்கொண்டே இருந்தது. அந்த ஒரு வாரம் முழுவதும் அன்னை சரியாக சாப்பிடவில்லை, தூங்கவில்லை, நிம்மதியாக இருக்க முடியவில்லை….தாகமாய் இருக்கிறேன்…தாகமாய் இருக்கிறேன் எனறு அந்த நோயாளி சத்தமிட்டபோதே அன்னையின் தியானம் மட்டுமல்ல, மாறாகாக அவரது சமூகப்பணியும் ஆரம்பித்துவிட்டது….

தாகமாய் இருக்கிறது என்ற அந்த வார்த்தைகள்தான் அன்னை இறைப்பணியை ஏற்கக் காரணமாயிருந்தது. அதன்பிறகு நடந்து அனைத்தும் உலக அதிசயங்கள், அற்புதங்கள். இறைப்பணியின் மாயஜாலங்கள் என்பதை நாம் அறிவோம்.

இறைவன் நம் ஒவ்வொருவருக்கும் அன்னை தெரேசாவிற்குக் கொடுத்ததுபோல ஒரு சிறப்பான பணியை கொடுத்திருக்கின்றார். அதை நாம் உணர்வதற்காக அந்த நோயாளி அன்னை தெரேசாவை அழைக்க ஒரு கருவியாய் இருந்ததுபோல, நம்மையும் யாராவது ஒருவர் மூலமாக, புத்தகத்தின் மூலமாக, செப வேளையில் கடவுள் நம்மை அழைத்துக் கொண்டுதான் இருக்கின்றார். அத்தருணத்தில் நம் உள்ளத்தில் ஒலிக்கும் இறைக்குரலுக்கு செவிமடுப்போம்….

# விவிலியம் அறிவோம்





இச 27 வது பிரிவின் முதற்பகுதியில் (27:1-13) வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைந்தவுடன் இஸ்ரயேல் மக்கள் செய்யவேண்டிய சில முக்கியமான செயல்களை மோசே அவர்களுக்குக் கூறுகிறார். இரண்டாவது பகுதியில் (27:14-26) உடன்படிக்கைச் சாபங்கள் அறிவிக்கப்படுகின்றன. இஸ்ரயேல் மக்கள் மோவாபுச் சமவெளியில் யோர்தான் ஆற்றுக்குக் கிழக்குப் பகுதியில் பாளையம்இறங்கித் தங்கியிருக்கிறார்கள். வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதற்குத் தாயராக இருக்கிறார்கள். யோர்தான் ஆற்றைக் கடந்தால் அவாகள் வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழைந்து விடுவார்கள். இந்தச் சூழ்நிலையில் மோசே வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைந்தபின் கடவுளின் கட்டளைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை மீண்டும் வலியுறுத்துகிறார். கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றி உடன்படிக்கையின் மக்களாக வாழ்வதால் வருகின்ற நன்மைகளையும், கடவுளின் கட்டளைகளைப் பின்பற்றாமல் உடன்படிக்கைக்கு எதிராகச் செயல்பட்டால் எதிர்கொள்ள வேண்டிய தீமைகளையும் அவர்களுக்கு வலியுறுத்திக் கூறுகின்றார். இந்தக் கூற்றுகள் எதிர்காலத்தை மனதில் கொண்டு கூறப்படுகின்றன. யோர்தான் ஆற்றைக் கடந்து வாக்களிக்கப்பட்ட நாட்டில் நுழையும் நாள்முதல் ஒவ்வொரு தலைமுறையினரும் மூதாதையர் கடவுளுக்குக் கூறிய வாக்குறுதிகளை நினைத்து உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாக வாழவேண்டும். இப்பகுதியில் மோசே செங்கடலைக் கடந்ததை நினைவு கூர்கிறார் (விப 13:17-15:27). இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் கடலும் ஆறும் அரைடயாளங்களாக வருகின்றன. எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியேறிய இஸ்ரயேல் மக்கள் கிழக்கு நோக்கிப் பயணித்தார்கள். நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் பயணித்தார்கள். கடவுளுக்கு எதிராகவும்

மோசேக்கு எதிராகவும் பல்வேறு கட்டங்களில் கிளர்ச்சி செய்தார்கள். எல்லாச் சூழலிலும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குச் சென்று சேருவதுதான் அவர்களின் இலட்சியமாக இருந்தது. இப்போது அவர்கள் மேற்கு நோக்கி யோர்தான் ஆற்றைக் கடந்து பயணிக்க இருக்கிறார்கள். எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து வெளியே வருவதிலும் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குள் நுழைவதிலும் தண்ணீர் ஒரு அடையாளமாக வருகிறது. இரண்டு நிலப்பரப்பிற்கும் தண்ணீர் ஒரு திறவு கோலாகவும் உள்ளது.

இச 27:1-13 வரையுள்ள இறைச் சொற்றொடர்களில் மோசே யோர்தான் ஆற்றைக் கடப்பதைப் பற்றியும், யோர்தான் ஆற்றைக் கடந்ததும் அவர்கள் செய்யவேண்டிய சில முக்கியச் செயல்களையும் குறிப்பிடுகிறார். இப்பகுதியில் யோர்தான் ஆறு என்ற சொற்றொடர் மூன்று இடங்களில் (27:2, 4, 11) குறிப்பிடப்படுகிறது. இந்த மூன்று குறிப்புகளும் மிகவும் முக்கியமானவை. முதல் குறிப்பு யோர்தான் ஆற்றைக் கடந்தவுடன் சாந்து பூசப்பட்ட பெரிய கற்களில் திருச்சட்டங்கள் எழுதப்பட வேண்டியதைக் குறிக்கிறது. பண்டைய காலத்தில் எழுதுவதற்கு பல வழிகள் பின்பற்றப்பட்டன. உதாரணமாக, பாப்பிரஸ் சுருளேடுகளில் மையினால் எழுதினார்கள். இப்பழக்கம் எகிப்தில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. மெசப்பெத்தோமியாவில் எழுத்தாணியின் உதவியுடன் களிமண் பலகைகளில் எழுதினார்கள். மேலும் கல்வெட்டுகள், மெழுகு தடவப்பட்ட மரப்பலகைகளில் மரக்குச்சுகளால் எழுதுவது போன்ற பழக்கங்கள் இருந்தன. கல்வெட்டுகளை உருவாக்குவதற்கு அதிக நேரம் தேவைப்படும்; எனவே கற்களில் சாந்து பூசி எழுதும் பழக்கம் உருவாக்கப்பட்டது. இது எழுதுவதற்கு இலகுவாகவும் எழுத்துக்கள் அழியாமலும் இருக்கும். கற்களில் சாந்து பூசி எழுதப்பட்ட கல்வெட்டுகள் அகழ்வராய்ச்சியாளர்களால் பாலஸ்தீனாவில் பல இடங்களில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இரண்டாவது குறிப்பு ஏபால் மலைமீது கற்களால் கட்டப்பட வேண்டிய பலிப்பீடம்பற்றிக் குறிப்பிடுகிறது. ஏபால் மலையும் கெரிசிம் மலையும் செக்கேமுக்கு அரணாக அமைந்துள்ளன. கெரிசிம் மலை செக்கேமுக்குத் தெற்கே ஏறக்குறைய 2849 அடி உயரத்தில் உள்ளது. ஏபால் மலை செக்கேமுக்கு வடக்கே ஏறக்குறைய 3077 அடி உயரத்தில் உள்ளது. இங்கே குறிப்பிடப்படுகின்ற பலிப்பீடம் யோசுவா 8 வது பிரிவில் கட்டப்படுவதாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பலிப்பீடத்தின் மீதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக சில அகழ்வாராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகிறார்கள். பலிப்பீடம் கற்களால் கட்டப்பட வேண்டும். அந்தக் கற்களின்மீது இரும்புக் கருவிகள் பட வேண்டாம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த அறிவுரைகள் விப 20:25 இல் காணப்படுவதை ஒத்ததாக உள்ளது. இரும்புக் கருவிகள் கற்களைச் செதுக்கி அலங்கரிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டன. யூதாவில் செதுக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்ட பலிப்பீடங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக

பெயேர்செபா என்னும் இடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பலிப்பீடத்தைக் குறிப்பிடலாம். பொதுவாக வழிபாட்டுத் தலங்களில் செதுக்கப்பட்ட கற்களைக் கொண்டே பலிப்பீடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. செதுக்கப்படாத கறகளால் கட்டப்படுகின்ற பலிப்பீடங்கள் பெரும்பாலும் தற்காலிக பயன்பாட்டிற்காகக் கட்டப்பட்டவையாகத் தெரிகின்றன. ஏபாலில் கட்டப்பட்ட பலிப்பீடத்தில் நல்லுறவுப்பலி மட்டுமே கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. பாவக் கழுவாய்ப் பலிகளோ, பரிகாரப் பலிகளோ ஒப்புக்கொடுக்கப்படவில்லை. ஏபால் மலையில் கற்களின்மீது எழுதப்படுகின்ற உடன்படிக்கை வார்த்தைகள் அனைவரும் அதைப் பார்க்க வேண்டும்; எல்லா மக்களும் தெரிந்து கொள்ளும் வண்ணம் உயரமான இடத்தில் இருக்க வேண்டும் என்பதற்காகவே. பொதுவாக நினைவுச் சின்னங்கள். கல்வெட்டுகள் ஆகியவற்றின் நோக்கம் அதுதான். பண்டைய காலங்களில் அரசர்கள் தங்கள் வெற்றிகளைப் பொறித்தி வைப்பதற்கும், அவர்களின் கொள்கைகள், சட்டங்களை எழுதிவைப்பதற்கும் இத்தகைய நினைவுச் சின்னங்களைப் பயன்படுத்தினார்கள். நமது கலாச்சாரத்திலும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களிலும், கல்லறைகளிலும், கட்டடங்களின் மூலைக்கற்களிலும் நினைவுகளைப் பொறித்து வைப்பதைப் பார்க்கிறோம். பண்டைய மேற்காசிய நாடுகளில் உடன்படிக்கை ஆவணங்கள் மக்கள் அணுக முடியாத புனித இடங்களில் வைக்கப்பட்டன. அதற்கு அடிப்படைக் காரணம் உடன்படிக்கை ஒப்பந்தங்கள் கடவுளர் முன்னிலையில் செய்யப்படுவதால் அவ்வாறு செய்யப்பட்டன.

மூன்றாவது குறிப்பு கெரிசிம் மலைமீதும் ஏபால் மலைமீதும் சாபங்கள் மற்றும் ஆசிர்களை அறிவிப்பதற்கு பன்னிரு குலங்களும் நிறுத்தப்படுவதைக் குறிக்கிறது. திருவிவிலியத்தில் யோர்தான் ஒரு முக்கியமான இடம். இஸ்ரயேல் மக்களின் வரலாற்றில் பல முக்கிய நிகழ்வுகள் இங்கே நடந்தேறியுள்ளன (காண் தொநூ 50:10-11; யோசுவா 12:1-4; மத் 3:13-17; மாற்கு 10:1). இஸ்ரயேலின் பன்னிரு குலங்களின் முன்னிலையிலும் உடன்படிக்கை ஆசிர்களும் சாபங்களும் கூறப்படுகின்றன. இச 27:15-26 வரையுள்ள இறைச் சொற்றொடர்களில் பன்னிரு சாபங்கள் பேசப்படுகின்றன. இந்த சாபங்கள் உடன்படிக்கையை மீறுபவர்களுக்கு வருகின்ற சாபக்கேடுகளாக இல்லை; மாறாக இந்தக் கூற்றுக்கள் உடன்படிக்கைக்கு எதிரான ஒரு சில செயல்களுக்குப் பலனாகக் கிடைக்க இருக்கின்ற தண்டனைகள் குறிப்பிடப்படாத சாபங்கள். இந்தச் சாபங்கள் ஒரு உறுதிமொழி வழிபாடாக உள்ளது. இரகசியமான முறையில் உடன்படிக்கைக்கு எதிரான செயல்களில் ஈடுபட்டு உடன்படிக்கையை மீறும் சூழ்நிலைகளுக்கு எதிராக மக்கள் முன்னிலையில் உறுதிமொழி எடுப்பதாக இந்த வழிபாடு அமைந்துள்ளது. இத்தகைய உறுதிமொழி வழிபாடுகள் அகில உலக ஒப்பந்தங்களிலும் உடன்படிக்கைகளிலும் உள்ளன. எந்தெந்த செயல்களைச் செய்பவர்

சாபத்திற்கு உள்ளாவர் என்பதைக் கூறுகையில் பன்னிரு வகையினர் சுட்டிக் காட்டப்படுகிறார்கள. அவர்கள் முறையே, ஆண்டவருக்கு அருவருப்பானதும், சிற்பியின் கைவினைப் பொருள்களுமான வார்ப்புச் சிலையையோ செதுக்குச் சிலையையோ செய்து அதை மறைவான இடத்தில் வைப்பவர், தம் தந்தையையோ தாயையோ பழிக்கிறவர், தமக்கு அடுத்திருப்பவரின் எல்லைக் கல்லை அப்புறப்படுத்துபவர், பார்வையற்றவரை வழி தவறச் செய்பவர், அன்னியருக்கும், அனாதைக்கும், கைம்பெண்ணுக்கும் உரிய நீதியைப் புரட்டுபவர், தன் தந்தையின் மனைவியோடு கூடுகிறவன், எந்தவொரு விலங்கோடும் புணர்கிறவன், தன் தந்தையின் புதல்வி அல்லது தன் தாயின் புதல்வியாகிய தன் சகோதரியுடன் கூடுகிறவன், தன் மனைவியின் தாயோடு கூடுபவன்,தமக்கு அடுத்திருப்பவரை ஒளிந்திருந்து கொல்பவன், குற்றமற்றவரைக் கொல்வதற்காகக் கையூட்டு வாங்குபவர், மற்றும் இத்திருச் சட்டத்தின் வார்த்தைகளை எல்லாம் கடைப்பிடித்து நடவாதவர் சபிக்கப்படுவர்.

கடவுளின் மக்கள், உடன்படிக்கையின் பங்குதாரர்கள் என்ற வகையில் ஆண்டவருக்கு அருவருப்பான காரியங்களை அவர்கள் செய்யக்கூடாது. இப்பகுதியில் வருகின்ற பன்னிரு சாபங்களும் ஆண்டவரால் ஏற்க முடியாத, அவர் அருவருக்கின்ற செயல்களைச் செய்வதால் வருகின்ற சாபங்கள். இங்கே கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் முழுமையானதல்ல; கடவுள் வெறுக்கின்ற, அவரது சாபத்தைக் கொண்டு வருகின்ற ஒரு சில செயல்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. கடவுளுக்கு ஏற்பில்லாத செயல்கள் இன்னும் பல இருக்கலாம். இந்தப் பட்டியலின் நோக்கம் என்னவென்றால் வாக்களிக்கப்பட்ட நாட்டில் குடியேறியபின் உடன்படிக்கை விதிகளுக்கு கீழ்ப்படிந்து வாழ்வதுதான் நாட்டின் குணாதிசயமாக இருக்க வேண்டும். ஒவ்வொரு சாபத்தையும் கூறியபின் மக்கள் அப்படியே ஆகட்டும் எனப் பதிலளிக்கின்றனர். இந்தப் பதில் கீழ்ப்படியாமைக்கான தண்டனைகளை அவர்கள் புரிந்து ஏற்றுக்கொள்வதைக் குறிக்கிறது.

இந்தச் சாபங்களை ஒன்றிணைக்கும் கருப்பொருள் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை; ஆனால் ஒரு சில அறிஞர்கள் தடைசெய்யப்பட்ட செயல்களின் இரகசியம் இந்தச் சாபங்களை ஒன்றிணைக்கும் கருப்பொருளாக உள்ளது எனக் கருதுகின்றனர் அது உண்மையானால் இணைச்சட்ட ஆசிரியர்கள் குற்றத்தை அடையாளம் காணுகின்ற ஒருவித சட்டவாதத்தை தவிர்க்க முயற்சி செய்கிறார்கள் எனக் கூறலாம். சட்டத்தைப் புறக்கணிக்கும் எந்தவொரு செயலும், அது வெளிச்சத்திற்கு வந்ததாகவோ, மறைவானதாகவோ இருந்தாலும், கடவுளுக்கு எதிரான குற்றம் என இங்கே அவர்கள் கூறுவதாக புரிந்து கொள்ளலாம். இப்பகுதியில் பதிவுசெய்யப்பட்டுள்ள இறுதி சாபம் அனைத்தையும் உள்ளடக்கியது. சட்டம் என்ன கூறுகிறது? அதை நிறைவேற்ற என்ன செய்யவேண்டும் என்பதைத் தெளிவாக தெரிந்திருந்தும் கீழ்ப்படிந்து வாழ்வதற்கு முயற்சி செய்யாதவர்களின்

அக்கறையின்மை மற்றும் செயலற்றதன்மையை கடவுளின் சாபத்திற்கு உட்படுத்துகிறது. இத்திருச் சட்டத்தின் என்ற சொற்றொடர், இந்தப் பட்டியலில் வருகின்ற சாபங்கள் பதிவுசெய்யப்பட்டு. இணைச்சட்டம் நூல் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் ஆவணமாக மாறிய காலத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

பயணம் தொடரும்,

அருட்பணி ஆ. அலெக்ஸ்.cmf





அருட்தந்தை.ஜஸ்டின் சேவியர் ராஜ்.
திருக்குடும்ப ஆலயம், பெருந்துறை, கோவை மறைமாவட்டம்.

# பொதுக்காலம் 4ம் ஞாயிறு - 28.01.2024

## இணைச்சட்டம் 18/15-20, 1 கொரிந்தியர் 7/32-35, மாற்கு 1/21-28


பாரம்பரிய கதை ஒன்று உண்டு. ஞானி ஒருவர் தன் சீடர்களுக்கு உபதேசித்துக்கொண்டிருந்தார். மனிதனுக்குள் நடக்கும் போராட்டம் பற்றிய செய்தியாக இருந்தது. குரு சொன்னார், இரண்டு நாய்கள் நமக்குள் சண்டையிட்டுக் கொண்டிருக்கின்றன. அதில் ஒரு நாய் நல்ல நாய். அது நன்மை செய்வதற்காகவே போராடுகிறது. மற்றொன்று தீய நாய். அது தீமை செய்வதற்காகவே போராடுகின்றது. சில நாள் நல்ல நாய் வெற்றி பெறுகிறது. சில சமயம் தீய நாய் வெற்றி பெறுகிறது. சீடர்களில் ஒருவர் ஆர்வத்தோடு கேட்டார். இறுதியில் வெற்றி பெறுவது யார்? குரு புன்முறுவலுடன் கூறினார். யஸருக்கு அதிகம் உணவளிக்கிறாயோ, அந்த நாய்தான் வெற்றி பெறும் என்று.

யூத சமூகத்திலே அரசர்களும், குருக்களும் வாழைடி வாழையாக தங்கள் அதிகாரத்தைப் பெற்றுவந்தனர். பிற இனத்தவர் அத்தகைய அதிகாரத்தைப் பெற இயலாத காரணத்தால், இவர்கள் மற்ற மக்களை அதிகம் மதிக்காமலும் அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமலும் வாழ்ந்தார்கள். எனவே அவர்களை நெறிப்படுத்த, அறுவுறுத்த இறைவாக்கினர்கள் தேவைப்பட்டனர். இந்த இறைவாக்கினர்கள் பரம்பரை பரம்பரையாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

இன்றைய முதல் வாசகத்தில், இறைவனிடம் நேரில் பேசிய மோசே, தன்னைப்போன்ற இறைவாக்கினரை, இறைவன் அனுப்புவார் என்றும், வரவிருக்கும் மெசியாவே ஒப்பற்ற இறைவாக்கினர் என்றும், உண்மையான இறைவாக்கினர்களை அறியும் முறையையும் குறிப்பிடுகிறார். இறைவாக்கினர்கள் இறைவனின் குரலாயினர். அவரது எக்காளமாயினர்.

பிச்சையெடுப்பவர் ஒருவர், ஒவ்வொரு வீடாகசச் சென்று பிச்சை எடுத்துக்கொண்டிருந்தார். அப்போது ஒரு வீட்டிலிருந்த ஒரு இளம் பெண், பிச்சை போடுவதற்கு ஒன்றுமில்லை என்று சொல்லி, அனுப்பிவிட்டாள். பிச்சைக்காரர் அந்த வீட்டைவிட்டு வெளியே வந்தபோது, அந்த இளம் பெண்ணின் மாமியார் வருவதைப் பார்த்து, பிச்சைக்காரர், பாரு தாயீ, உன் மருமகள் சாப்பாடு இல்லை என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டாள், என்று கூறினார். உடனே அந்த மாமியார், அவ, அப்படியா சொன்னா? அப்படி சொல்வதற்கு அவளுக்கு என்ன அதிகாரம் இருக்கு, என்று சொல்லிவிட்டு, அந்தப் பிச்சைக்காரரைப் மீண்டும் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். பிச்சைக்காரரும் ஏதாவது கிடைக்கும் என்ற நப்பாசையுடன், அவரைப் பின்பற்றிச் சென்றார். வீட்டை வந்தடைந்தவுடன், அந்த மாமியார், உனக்குப் பிச்சை இல்லைனு செல்றதுக்கு என் மருமகளுக்கு அந்த அதிகாரமும் கிடையாது, இந்த வீட்டில் எல்லா அதிகாரமும் என்னிடம்தான் இருக்கு. இப்ப நான் சொல்றேன், உனக்கு பிச்சை இல்லை, நீ போகலாம் என்று சொல்லி அந்தப் பிச்சைக்காரரைத் துரத்திவிட்டார்ராம். இத்தகைய சூழ்நிலையில் அதிகாரத்தைப் பற்றிய சரியான புரிதலை நாம் பெற்றுக்கொள்ள இன்றை வாசகங்கள் நனக்கு அழைப்பு விடுக்கின்றன.

நமது அதிகாரம் மற்றவர்களை அடக்கும், அழிக்கும். இதற்கு நேர் மாறானது இயேசுவின் அதிகாரம். இயேசு தன் அதிகாரத்தை மன்னிப்பிற்குப் பயன்படுத்தினார். பேய்கள் பயன்படுத்தினார். குணமாக்கவும், மற்றவர்களுக்காகத் தன் உயிரைத் தியாகம் செய்யவும் படுயன்படுத்தினார். நாம் சிந்திப்போம். நமது அதிகாரத்தை எதற்குப் பயன்படுத்துகிறோம்? மற்றவர்களைப் கட்டுப்படுத்துவதற்கும், அடக்கி ஆளவும், அச்சுறுத்தவும் பயன்படுத்துகிறோமா? அல்லது அன்பு செய்யவும், உதவி செய்யவும், நல்லது செய்யவும் பயன்படுத்துகிறோமோ? சிந்திப்போம், செயல்படுவோம். ஆமென்.



# பொதுக்காலத்தின் நான்காம் ஞாயிறு

இச. 18 : 1, 5–20, 1கொரி. 7 : 32–35, மாற். 1 : 21–28

**21-01-2024**




பா. சேவியர்
திண்டுக்கல்


## திருப்பலி முன்னுரை

வாழ்க்கையில் எல்லாம் ஒழுங்காய் இருக்க வேண்டும் என்ற வேண்டுதலோடு வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் பொதுக்காலத்தின் நான்காம் ஞாயிறு வழிபாட்டிற்கு அன்புடன் வரவேற்கிறேன்.

இன்றைய வழிபாடு பணி புரிவதே உண்மையான அதிகாரம் என்ற கருத்தை மையமாகக் கொண்டுள்ளது.

நம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் ஒரு அதிகாரத்தைத் தந்திருக்கிறார். அந்த அதிகாரத்தை நாம் எப்படி எதற்காகப் பயன்படுத்துகிறோம், அந்த அதிகாரத்தால் நன்மை விளைகிறதா? தீமை விளைகிறதா? என்பது குறித்து சிந்திக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

போட்டியிட்டுப் பெறும் பதவிகளால் ஒருவருக்குக் கிடைக்கும் அதிகாரம் நிரந்தரமானதல்ல. மாறாக, உன்னதமான பண்பு, உயர்ந்த அறிவு இவைகளைக் கொண்டு ஒருவர் தனக்குள் உருவாக்கிக்கொள்ளும் அதிகாரமே நிலையானது. இந்த அதிகாரம் சுதந்திரத்தைத் தரும். உண்மையை நோக்கி அனைவரையும் வழிநடத்தும். இயேசுவின் அதிகாரம் இந்த வகையைச் சார்ந்தது.

பாவச்சோதனையால் கடவுளுக்குக் கீழ்ப்படிய மறுத்த ஆதாமைப்போல் இல்லாது, பணத்திற்காக இயேசுவை விலைபேசிய யூதாசைப்போல் இல்லாது, இயேசுவின் சந்திப்பால் புதுவாழ்வு பெற்ற சக்கேயுவைப்போல் மனம் மாறி வாழவும், கடவுளால் கொடுக்கப் பட்ட அதிகாரத்தைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் இறைவனின் பிரசன்னம் நம் வாழ்வில் செயல்படவும் இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

இஸ்ரயேல் மக்களை மீட்டு அவர்களை வழிநடத்த ஒரு மீட்பரைத் தரப்போவதாக மோசே வழியாக கடவுள் தரும் நற்செய்தியே இன்றைய முதல் வாசகம். உண்மையான இறை வாக்கினர்களை அறியும் முறை, இறைவாக்கினர்களின் பணி போன்றவற்றை விளக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

இறைவன் மீது கொண்ட பற்று குறைந்து, உலக இன்பங்களின் மேல் நாட்டம்கொண்டு வாழ்ந்த கொரிந்து நகர மக்களுக்கு பவுலடியார் கூறும் அறிவுரையே இன்றைய இரண்டாம் வாசகம். திருமணத்தையும் மனத்துறவையும் ஒப்பிட்டு மதிப்பீடு செய்யும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) ஞானத்தின் ஊற்றான இறைவா, உம் திருஅவையின் தலைவர்களான எம் திருத்தந்தை, எங்கள் ஆயர், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமக்கும் மக்களுக்கும் இணைப்புப் பாலமாக இருந்து, உமது இறையாட்சி இம்மண்ணில் மலர உழைத்திட அவர்களுக்கு நல்ல உடல் நலத்தையும் ஆன்ம பலத்தையும் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) அதிகாரத்தைப் பகிர்ந்தளிக்கும் அன்பு இறைவா, குடும்பம், சமுதாயம், மதம், அரசியல் போன்ற துறைகளில் பொறுப்பில் உள்ளவர்கள் அனைவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரத்தை சரியான முறையில் பயன்படுத்தவும், பணிபுரிவதே உண்மையான அதிகாரம் என்பதை உணர்ந்து செயல்படவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) கனிவுடையோர் பேறு பெற்றோர் என்று மொழிந்த அன்பு இறைவா, எங்கள் குடும்பங்கள் இயேசுவின் மறையுடலில் இணைந்திருக்கவும், நாங்கள் ஒருவரையொருவர் அன்பிலும் செபத்திலும் தாங்கிக் கொள்ளவும், துன்புறுவோருக்கு ஆறுதலாக இருக்கவும், இன்ப துன்பங்களை பெருமையோடு பகிர்ந்து வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) எம்மைப் பராமரித்துக் காக்கும் அன்பு இறைவா, சமுதாயத்தை அலைக்கழித்து வரும் சுயநலம், சுரண்டல், அடிமைத்தனம், சாதிய ஆதிக்கம், பயங்கரவாதம், பாலியல் வன்கொடுமை, அடக்கியாளும் அதிகாரம் ஆகிய அனைத்து தீய சக்திகளையும் எதிர்த்துப் போராடும் மனவலிமையையும் போராட்ட குணத்தையும் எங்களுக்குத் தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# ஆண்டவரை காணிக்கையாக அர்ப்பணித்தல்

மலா. 3 : 1-4, எபி. 2: 14-18, லூக். 2 : 22-40

02-02-2024

திருப்பலி முன்னுரை




பா. சேவியர்
திண்டுக்கல்


இன்றைய வழிபாட்டின் வழியாக புடமிடப்பட்ட தங்கமாய் தூய்மை பெற வருகை தந்துள்ள அன்பு இறைமக்களே, உங்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கிறேன்.

உலக மீட்பிற்காக இறைவனால் அனுப்பப்பட்ட இறைமகன் இயேசு, தன்னை அனுப்பிய தந்தையின் கரத்தில் தன்னை அர்ப்பணித்து நமக்கெல்லாம் சிறந்த முன்மாதிரிகை காட்டு கிறார். அவர் காட்டிய வழியில் நின்று, திருமுழுக்கில் நாம் பெற்ற அருட்பொழிவை இன்னும் ஆழமாக அனுபவிக்கவும், நம்மையே அவருக்கு முழுமையாக அர்ப்பணித்து, சான்று பகர்ந்து வாழவும் இன்றைய விழா நம்மை அழைக்கிறது.

காணிக்கையாக்குதல், அர்ப்பணித்தல், ஆண்டவரையே சொந்தமென ஏற்றுக்கொள்ளு தல் என்ற மூன்று முத்தான கருத்துக்களை நம் நெஞ்சங் களில் விதைக்கிறது இன்றைய வார்த்தை வழிபாடு. கடவுளின் வருகையை எதிர்பார்த்து காத்திருப்போர் ஒருநாளும் ஏமாற்றமடையார் என்பதை சிமியோன் அன்னா வழியாக நமக்கு உணர்த்தி நம் விசுவாசத் தை வலுவாக்குகிறது.

இருளை அகற்றும் ஒளியாக வருகின்ற இயேசு நமக்குள் ஏற்றிவைத்த ஒளியைக் கொண்டு நமக்கு அடுத் திருப்போரின் வாழ்வில் ஒளியேற்றவும், இறையரசை கட்டியெழுப்பும் கருவிகளாக மாறிடவும் இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

இன்றைய நாளில் இறைப் பணிக்காகத் தங்களது வாழ்வை அர்ப்பணித்த ஒவ்வொரு உள்ளங்களுக் காகவும் சிறப்பாக செபிப்போம்.

## முதல் வாசக முன்னுரை

ஆண்டவரின் நாள் பற்றி மலாக்கியா கூறும் இறைவாக்கை இன்றைய முதல் வாசகமாக திருஅவை நமக்கு வழங்கியுள்ளது. ஆண்டவர் நம் அனைவரையும் பொன் வெள்ளியைப் போன்று புடமிட்டு, புதுப்பித்து, தூய்மையாக்கி அவருக்கு உகந்த காணிக்கையாக்குகிறார் என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

நம்மைப்போல் ஊனும் இரத்தமும் கொண்டதால்தான் இயேசு நம் சகோதரர் என்ற கிறிஸ்துவின் மேன்மையை மையக்கருத்தாகக் கொண்ட திருமுகம் இன்றைய இரண்டாம் வாசகமாக அருளப்பட்டுள்ளது. கிறிஸ்துவே சாவையும் பாவத்தையும் போக்கும் நித்திய தலைமை குரு என்பதை எடுத்துரைக்கும் இவ்வாசகத்தைக் கவனமுடன் கேட்போம்.


## மன்றாட்டுகள்

1) படைகளின் ஆண்டவரே இறைவா, உம் வழியை ஆயத்தம் செய்ய உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், அருட்தந்தையர், அருட்கன்னியர் அனைவரும் தம் சொல்லாலும், செயலாலும், நல் வழிகாட்டலாலும் உலக மாந்தரை பொன் வெள்ளியைப்போல் புடமிட்டு தூய்மையாக்கி, உமக்கேற்ற மக்களாய் உருவாக்கும் புனிதப் பணிகளைத் தொய்வின்றித் தொடரவும், அவர்கள் நல்ல உடல் நலத்துடனும் ஆன்ம பலத்துடனும் வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2) எங்கள் அன்புத் தந்தையே இறைவா, உமக்கு அர்ப்பணிக்கப்பட்ட இயேசு, எவ்வாறு உமக்கு உரியவர் ஆனாரோ, அதே போல திருமுழுக்கின் வழியாக உமக்கு அர்ப்பணிக்கப்பட்ட நாங்கள் ஒவ்வொருவரும் உமக்கு உரியவர்களாய் வாழவும், சிமியோன் அன்னாவைப் போல் உம் திருமகன் இயேசுவை இனம் கண்டு அவருக்கு சான்று பகர்ந்து வாழவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3) எம் அக இருளை அகற்றுகின்ற ஞானஒளியே இறைவா, நீர் எங்களுக்கு கொடையாகக் கொடுத்த எம் குழந்தைகளுக்காக உமக்கு நன்றி செலுத்துகின்றோம். மரியாளும் யோசேப்பும் தங்கள் குழந்தை இயேசுவை காணிக்கையாக ஒப்புக் கொடுத்ததைப்போல நாங்களும் எங்கள் குழந்தைகளை உமக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்கள் உம் திருமகன் இயேசுவைப் போல அறிவிலும் ஞானத்திலும் சிறந்து விளங்கி உமக்கேற்ற பிள்ளைகளாக வாழவும் வளரவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4) அனைத்தையும் ஆண்டு வழி நடத்துகின்ற அன்பு இறைவா, எம்மை ஆளும் அரசியல் தலைவர்கள் மற்றும் அதிகாரிகள் சுயநலம் பாராது, மக்கள் நலனிலும், நாட்டு வளர்ச்சியிலும் அக்கறைகொண்டு சிறந்த செயல் திட்டங்களை வகுத்து அவற்றை நடைமுறைப்படுத்தவும், அனைத்திலும் எம் நாடு தன்னிறைவு பெறவும் அருள் புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.



# பொன் மொழிகள் காட்டும் வாழ்வின் வழி

தொலைக்காட்சிக்கும், அலைபேசிக்கும் அதிகம் முக்கியம் உள்ள,
புத்தக அலமாரியே இல்லாத வீட்டில் உள்ளவர்களோடு
எந்தத் தர்க்கமும் செய்யாதீர்கள்.– எமிலியா கிளார்க்

சுயமாக சிந்திக்காமல் ஒரு கட்சியின் பின்னால் நின்று
வாதிடுவதுதான் தேசபக்தி என்றால்
அந்தத் தேசபக்தி என்னுடைய செருப்புக்குச் சமானம்.
– சுபாஸ் சந்திரபோஸ்

சில நேரங்களில் உங்களை தாழ்த்திப் பேசுபவர்களை அப்படியே விட்டுவிடுங்கள்,
ஏனென்றால், அவர்களால் செய்ய முடிந்த ஒரே விஷயம் அதுமட்டும்தான்.
– பாரதியார்

பொதுவில் நடக்கும் அநீதிகளை கண்டுகொள்ளாமல் இருக்கும்,
எதிலும் பொறுப்பற்றவர்களுக்குக் கிடைக்கும் எதிர்காலம் என்னவென்றால்
அநீதியான, தீய தலைவர்களால் ஆளப்படுவதுதான். – பிளேட்டோ

ஆலோசனையாளர்கள் ஆயிரம் யோசனை சொன்னாலும்
ஆட்சியாளனுக்கு சொந்த புத்தி இல்லாவிட்டால், அத்தனையும் பாழ்.

பிறரன்பில்லாமல் வாழ்வதும், தனக்காகவே வாழ்வதும் மிகவும் எளிது.
ஆனால், அது அர்த்தமற்றதும், வீணானதுமாகும். – லியோ டால்ஸ்டாய்

ஒரு தோல்வியில் இருந்து கற்றுக்கொண்டால்
அந்தத் தோல்வியும் வெற்றிதான்.

அமைதியாய் இருப்பவன் முட்டாள் என்று எண்ணிவிடாதே.
பேசுபவனைவிட கேட்பவனே புத்திசாலி. – புத்தர்

# சங்க இலக்கியச் சுவை



திருமதி.லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை

## சங்க இலக்கியத்தில் தந்தை வழிக் குடும்பத்தினைப் பற்றிக் காண்போம்

மனித குலத்தில் ஆதியில் தோன்றி வளர்ந்த தாய் வழி முறையானது தமிழர்களிடம் இருந்ததை சங்க இலக்கியங்களின் வழி அறிய முடிந்தாலும், சங்க காலத்திலேயே ஆண் மையச் சமூக முறை வலுவாக வேர் ஊன்றிப் பரவலாகி விட்டதையும் காண முடிகிறது. ஆண் மையச் சமூகத்தில் பெண் திருமணத்திற்குப் பின் தன் கணவனுடைய தந்தையகத்தில் வாழ வேண்டும். மணமானபின் தலைவன் தலைவியை அவனுடைய இல்லத்திற்கு அழைத்து வந்த போது அவனுடைய தாய் அவளுக்கு சிலம்பு கழி நோன்பு செய்து இருக்கிறாள்.

நும்மனைச் சிலம்பு கழீஇ அயரினும் எம்மனை வதுவை நல் மணம் கழிக (ஐங்குறு. 399:1-2)

(சிலம்பு கழிதல் என்பது சங்க இலக்கியம் சொல்லும் ஒரு சடங்கு. மணம் புரிந்து மறு வீடு போகும் முன் தலைவி அணிந்த கன்னிச்சிலம்பை கழிக்கும் சடங்கு) இதன் வழி மணமக்களின் வாழ்விடம் கணவன் அகம் என்பதை உறுதிப்படுத்தலாம். மேலும்

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே (குறுந். 135)

என்னும் குறுந்தொகை பாடல் மூலம் பெண் தன் கணவனையே முழுவதும் சார்ந்திருந்த நிலையை அறிய முடிகிறது. சங்க காலத்தில் தந்தை வழிக் குடும்ப முறை மிகவும் வலுவான ஒரு பரவலான முறையாக இருந்துள்ளதைப் பொருள்வயிற் பிரிவு, போர், வாழ்வியல் சடங்குகள், குடும்பம், திருமணம் என பல்வேறு சமூக களங்களைக் காண முடியும்.

### அடுத்ததாக விரிந்த குடும்பம்:

சங்க காலத்தில் தனி குடும்ப அமைப்பு விரிவு பெற்று இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும், உடன் வாழும் விரிந்த குடும்ப முறையையும் காணமுடிகிறது. கணவன், மனைவி, மகன் ஆகியோருடன் தந்தை சேர்ந்து வாழ்ந்த நேர்வழி விரிந்த குடும்ப முறையை ஒக்கூர் மசாத்தியாரின் புறநானூற்று பாடல் கூறுகிறது. சங்ககாலக் குடும்ப அமைப்பில் முதல் நிலை உறவினர்களை மட்டும் ஓரளவு இளம் காண முடிகிறது. நற்றாய் (பெற்ற தாய்) ஒருபுறம் இருந்தாலும் செவிலி தாயும், அவளது மகளாகிய தோழியும் குடும்ப அமைப்பில் முதன்மைப் பங்கு பெறுகின்றனர். சமூகத் தாயாக விளங்கிய செவிலித்தாய் முறை பண்டைய இனக்குழு மரபின் மாறுபட்ட தொடர்ச்சியாகச் சங்க காலத்தில் வருவதை அறிய முடிகிறது. சங்க காலத்தில் ஒவ்வொரு ஆயத்துக்கும் செவிலித் தாயே பொறுப்பேற்றிருந்தாள்.

இல்லற வாழ்வின் இறுதி காலத்தில் பெருமைகள் நிறைந்த மக்களுடன் சேர்ந்து, அறத்தினை விரும்பிய சுற்றுதோடு இணைந்து, தலைவனும், தலைவியும் மனையறம் காத்தலே இல்வாழ்வின் பயனாகும் எனச் சங்க கால மக்கள் எண்ணினார்கள். விரிந்த குடும்பம் பற்றிய இக்கருத்தினை தொல்காப்பியமும் பதிவு செய்கிறது. சங்க சமூகம் குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள்

காட்டுகின்றன. அதன் தொடர்ச்சியாகவே இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாகவும் தந்தை வழி குடும்ப அமைப்பை கொண்டதாகவும் இருக்கிறது. தொன்மை மிக்க இக்குடும்ப அமைப்பு முறை தமிழ் சமூகத்தின் அடையாள பெருமிதம் ஆகும்.

தமிழர் பரம்பரை:
ஆண் தலைமுறையைக் கீழ்கண்டவாறு அழைப்பர்:

பரண்
சேயோன்
ஓட்டன்
பூட்டன்
பாட்டன்
தந்தை
மகன்
பெயரன்
கொள்ளுப் பெயரன்
எள்ளு பெயரன்.

பெண் தலைமுறைகள் முறையே: பரை

சேயோள்
ஓட்டி
பூட்டி
பாட்டி
தாய்
மகள்
பெயர்த்தி

திருவிவிலியத்தில் தங்கா கொள்ளுப் பெயர்த்தி
எள்ளுப் பெயர்த்தி என அழைப்பர்.

திரு விவிலியத்தில் நம் ஆண்டவர், ஆயிரம் தலைமுறைகளையும் நான் அன்புச் செய்வேன்: இரக்கம் காட்டுவேன் என்கிறார்.

ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்- (விடுதலைப் பயணம் 34:7)

அவரது உடன்படிக்கையை என்றென்றும் நினைவில் கொள்ளுங்கள்; ஆயிரம் தலைமுறைக்கென அவர் அளித்த வாக்குறுதியை மறவாதீர்கள் (1குறிப்பேடு 16 :15).

இயேசுவுக்கே மகிமை.

லீமா விக்டோரியா
தமிழ் ஆசிரியை.






சிலர் தேர் படையிலும், சிலர் குதிரை படையிலும் பெருமை கொள்கின்றனர்.
நாமும் நம் கடவுளாகிய ஆண்டவரின் பெயரில் பெருமை கொள்கின்றோம். (திருப்பாடல் 20: 7).

நீங்கள் பணத்தை இழந்தால் அது கொஞ்ச இழப்பு. நற்பெயரை இழந்தால் பேரிழப்பு. துணிவை இழந்தால் சகலத்தையும் இழந்து விடுவீர்கள். – கதே (ஜெர்மானிய பேரறிஞர்)

துணிவு என்பது அச்சம் அற்றிருக்கும் நிலை அல்ல; மாறாக அச்சத்தை வென்று விட்டிருக்கும் நிலையேயாகும். கடல் எப்போதும் அமைதியாக இருக்காது, காற்று ஒரே பக்கம் வீசிக் கொண்டிருக்காது, அதேபோல் நம் பாதையில் சந்தோஷங்கள் மட்டுமல்ல, எத்தனையோ பிரச்சனைகள், இடர்பாடுகளை நாம் சந்திக்கும் தருணங்களில், நம்முடைய ஆற்றல் குறைந்து விடும். வலிமை தீர்ந்துவிடும், என்று அஞ்ச வேண்டாம். ஒவ்வொரு பிரச்சனைக்கு பிறகும் நம் சக்தி அதிகரிப்பதாய் நாம் நம்ப வேண்டும்.

ஒரு கவிஞர் இவ்வாறாக சொல்கின்றார்...

இந்தப் பாதையை எளிதாக்கு,
என் சுமைகளை குறைத்து விடு,
என்று நான் கேட்க மாட்டேன்!
கரடு முரடான பாதையில், நடப்பதற்கான வலிமையையும்,
சுமப்பதற்கான பலத்தையும் கொடு
என்று கேட்கிறேன்! சிகரங்களில் ஏறிச் செல்லவும்,
தடைகளை படிகளாக்கவும் துணிவிருந்தால் போதும் ! –கெய்ல் ப்ரூக்பர்கெட்

துணிச்சலும் வலிமையும் கொண்டவர்கள்தாம் காலம் காலமாய் இந்த உலகத்தை வழிநடத்திச் செல்கின்றார்கள். உயர்ந்த இலட்சிய பயணத்தை அடைகின்றார்கள். மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கின்றார்கள்.

## மாவீரன் அலெக்சாண்டர்

அவர் உலகம் முழுவதும் அறியக்கூடிய நபர். மாசிடோனியாவின் தலைநகராகிய பெல்லாவில் கி.மு. 356 ஆம் ஆண்டில் பிறந்தவர் அலெக்சாண்டர். உலகம் முழுவதையும் ஜெயிக்க வேண்டும். என்ற இலட்சிய கனவை நோக்கி இடைவிடாது பல ஆண்டுகள் பல நாடுகளோடு போரிட்டு, பெரும் வெற்றிகளை பெற்றவர். இவருடைய தந்தை பிலிப் உண்மையிலேயே பேராற்றலும், முன்னறி திறனும், வாய்ந்தவரராக விளங்கினார். அலெக்சாண்டரின் தந்தை மிகுந்த மதி நுட்பமும், வீரமும் முயற்சியும் மிக்கவர். எனவே அவர் தனது மகனை அறிவிலும், ஆற்றலிலும், மெய்ஞானத்திலும், தன்னம்பிக்கையிலும் சிறந்த ஒரு துடிப்புள்ள இளைஞனாக விரும்பினார்.

எல்லா பயிற்சிகளிலும் அலெக்சாண்டரே முதன்மையானவராக திகழ்ந்தார். அலெக்சாண்டரின் ஆசிரியர் அரிஸ்டாட்டில் அவருக்கு அறிவியல், அரசியல், தத்துவம், தர்கவியல், மருத்துவம் போன்ற பல்வேறு துறைகளை கற்றுத் தந்தார். அலெக்சாண்டரின் துணிவு நாடுகளை வெல்லும் எண்ணம் மட்டுமாக இருக்கவில்லை. மாறாக உலக நாடுகள் அனைத்தையும் வென்று, தன் ஒரே குடைக்கு கீழ் அந்நாட்டு மக்களையெல்லாம் ஒருங்கிணைத்து, பின் தன் ஆசிரியர் அரிஸ்டாட்டலின் வழியில் தனி நாகரிகமுடையவர்களாகவும், சிந்தனையாளர்களாகவும், மிகுந்த ஞானம் பெற்றவர்களாகவும் ஆக்க வேண்டும் என்பதே அவரது ஆவலாக இருந்தது. அன்றைய மன்னர்கள் எல்லாம் ஒரு நாட்டை வெற்றி கொண்டு விட்டால், அந்த மன்னனையும் மக்களையும் அடிமைகளை விட கேவலமாக நடத்துவார்கள். பலவிதமான சித்திரவதைகளையும் செய்வார்கள். ஆனால் மாவீரன் அலெக்சாண்டர் அப்படி யாரையும் நடத்தியதில்லை. தான் வெற்றி கொண்ட நாடுகளை அடிமைப்படுத்தியோ, மன்னர்களை அவமானப்படுத்தியோ, தன் பெருமைக்கு களங்கம் உண்டாக்கி கொண்டதில்லை. அவர் இந்திய நாட்டின் வளத்தை பற்றியும், நிறைந்த செல்வம் பற்றியும் கேள்விப்பட்டு இந்தியா முழுமையும் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வர வேண்டும் என்று நினைத்தார். அது நிறைவேறவில்லை. ஜீலம் நதிக்கரையில் நடந்த போரில் அலெக்சாண்டர் இந்திய மன்னர் போரஸை வென்றார். சிறைப்பட்டு கைதியாக நின்ற போரஸிடம் உங்களை எப்படி நடத்த வேண்டும்? என்று கேட்டபோது வீரத்துடன் என்னை ஒரு மன்னரைப் போல் நடத்த வேண்டும் என்றார் போரஸ் .

இப்படி ஒரு பதிலை எதிர்பார்க்காத அலெக்சாண்டர் மிகவும் மகிழ்ச்சி கொண்டார். போரஸை தனது நண்பர் ஆக்கிக் கொண்டார். அவர் நாட்டை திருப்பிக் கொடுத்ததோடு மட்டுமல்லாமல் மேலும் சில புதிய பகுதிகளையும் இணைத்து கொடுத்து தனது பெருந்தன்மையை காட்டினார்.

உலக சரித்திரத்திலேயே அலெக்சாண்டருக்கு இணையாக ஒரு மாவீரனை அடையாளம் காட்ட முடியாதுதான். அவர் மிகப்பெரிய வீரர் மட்டுமல்ல. மிக உயர்ந்த மனிதர்... என்ற வரலாறுகள் கூறுகின்றன. துணிவு என்பது மற்றவர்களை அடக்கி ஆள்வதில் அல்ல.. மற்றவர்களுக்குரிய மாண்புகளோடும், மரியாதையோடும், சுதந்திரத்தோடும், கண்ணியத்தோடும் நடத்துவது, பிறரை மதிப்புக்குரியவர்களாக எண்ணுவதும்தான் என்பதை இது நமக்கு எடுத்துரைக்கின்றது.

என் அருள் உனக்கு போதும். வலுவின்மையில் தான் வல்லமை நிறைவாய் வெளிப்படும் என்றார். ஆதலால் நான் என் வலுவின்மையை பற்றிதான் மனமுவந்து பெருமை பாராட்டுவேன். அப்போது கிறிஸ்துவின் வல்லமை என்னுள் தங்கும். (2கொரிந்தியர்12:9).

ஆம்! கிறிஸ்துவின் வல்லமை நம்முள் தங்கும் போது, நம் வலுவின்மையிலும், இகழ்ச்சியிலும், இடரிலும், இன்னலிலும், நெருக்கடியிலும் நாம் அகமகிழ்வோம்.... கடவுளுக்கு அஞ்சிஇ இறைத் துணையை நாடுவோம்..

நம் மனம் என்ற வைகறை வானில் மீண்டும் விடியல் எழும்...

# திருக்குறள் வழங்கும் சமூக நெறி

குறள் 80

அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு



## குறள் விளக்கம்

அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர் நின்ற உடம்பாகும் அன்பு இல்லாதவர்க்கு உள்ள உடம்பு எலும்பைத் தோல் போர்த்த வெற்றுடம்பே ஆகும்

## சிந்தனை

இந்த உலகில் உள்ளஉயிரினங்கள் அனைத்தும் அன்புசெய்யவும் அன்புசெய்யப்படவும் விரும்புகிறது. நான் யாரையும் அன்புசெய்யமாட்டேன் யாரும் என்னைஅன்புசெய்யதேவையில்லை லஎன்றுயாரும் சொல்லமாட்டார்கள். மரம் செடிகள் கூட அன்பாகவளர்க்கப்படுகின்றபொழுது நன்றாகவளர்கிறதுஎன்றுசொல்கிறார்கள். மிருகங்களும் ஒன்றைஒன்றுமிகஅன்பாகநடத்துகின்றது.
மனிதர்கள் அன்பில் உயர்ந்துநிற்கின்றார்கள்,உயர்ந்துநிற்கவேண்டும். மிருகங்கள் தன்னைச் சார்ந்தவர்களைமட்டும் தான் அன்புசெய்கின்றது. மனிதர்கள் மட்டும் தான் பிரபஞ்சத்தைஅன்புசெய்யமுடியும். மரம் செடிகொடிகளைஅன்புசெய்யமுடியும். அனைத்துஉயிரினங்களையும் அன்புசெய்யமுடியும். அனைத்துமனிதர்களையும் அன்புசெய்யமுடியும். ஏன் இறைவனை கூட அன்புசெய்யமுடியும். மற்றஎந்த உயிரினத்தினாலும் இறைவனைஅன்புசெய்யமுடியாது. எனவே மனிதன் அன்புசெய்வதற்காகவேபடைக்கப்பட்டிருக்கிறான் என்று கூட சொல்லலாம்.
இத்தகையஅன்புஒருமனிதனிடம் இல்லாமல் இருக்குமேஎன்றால் அவன் எலும்பும் தோலும் ஆகியஒருசாதாரணஉடம்புதான் உயிரற்றவன் என்றுவள்ளுவர் குறிப்பிடுகின்றார். எனவேஅன்பேபிரதானம். மனிதனாகப் பிறந்ததேஅன்புசெய்வதற்காகதான். புனிதஅசிசியார் பறவைகளையும் மிருகங்களையும் சகோதரசகோதரிகளேஎன்றுஅழைத்தாராம். அத்தகையஅன்புஉணர்வோடு இருந்தினால் அனைத்துஉயிரினங்களும் பறவைகளும் மிருகங்களும் அவரிடம்அன்பாக இருந்தன.
வேதாகமத்தில் ஆண்டவர் தன்னுடையகட்டளைகளை இரண்டில் சுருக்கிவிடுகின்றார். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழு மனத்தோடும் முழுஆற்றலோடும் உன் ஆண்டவராகியகடவுளிடம் அன்புகூர்வாயாகஎன்பதுமுதன்மையானகட்டளை. உன்மீதுநீஅன்புகூர்வது போல் உனக்குஅடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாகஎன்பது இரண்டாவதுகட்டளை மாற் 12:30, 31. இந்த இரண்டுகட்டளைகளுமேசிறப்பானது.



அருட்சகோதரி.ஜெஸிந்தா ஜான்சன்.fspm